**தனிப்பட்ட முறையிலான வெளிநாட்டுப் பயணங்களுக்கான**
**அந்நியச் செலாவணி வெளியீடு அதிகரிப்பு**

நவம்பர் 18, 2002

A.P. (DIR Series) சுற்றறிக்கை எண் 51

**அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வர்த்தகர் அனைவருக்கும்**

அன்புடையீர்,

**தனிப்பட்ட முறையிலான வெளிநாட்டுப் பயணங்களுக்கான**
**அந்நியச் செலாவணி வெளியீடு அதிகரிப்பு**

இந்தியக்குடியிருப்போர் தனிநபர்கள் ஓராண்டில் மேற்கொள்ளும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனிப்பட்ட முறையிலான வெளிநாட்டுப் பயணங்களுக்கான செலவுத் தொகை அந்நியச் செலாவணியில் 5000 அமெரிக்க டாலர் அல்லது அதன் மதிப்புள்ள தொகையைத் தாண்டும் வேளையில் அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வணிகர்கள் ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி பெறுமாறு. இந்திய அரசு அறிவிப்பு எண் G.S.R.381(E) 3 மே 2000 தேதியிட்ட அட்டவணை III ல் குறிப்பெண் 2ல் உள்ள விவரங்களின்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

2. தாராளமயமாக்கலின் ஒரு நடவடிக்கை முறையாக இந்த மேற்குறிப்பிட்ட அந்நியச் செலாவணி வரம்பு அமெரிக்க டாலர் 10000மாக அல்லது அதன் மதிப்புத் தொகையாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த வரம்பினை மீறும் வகையிலமைந்த அந்நியச் செலாவணி வெளியீட்டுக்கான விண்ணப்பங்கள் உரிய பிராந்திய ரிசர்வ் வங்கி அலுவலகங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் மூலம் அனுப்பிவைக்கப்படலாம்.

3. அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இந்த சுற்றறிக்கையின் கருத்துக்களைத் தத்தம் குழுவைச் சார்ந்த முகவர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்வாராக.

4. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள கட்டளைகள் யாவும் FEMA 1999 (42 of 1999) ன் சட்டப்பிரிவு எண் 10(4) மற்றும் சட்டப்பிரிவு எண் 11(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

கிரேஸ் கோஷி
தலைமைப் பொது மேலாளர்